1967 ஜூலை 8] [பேரவைத் தலைவர்]

எனவே, வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை 12—7—1967 புதன்கிழமை காலை 11 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 12—7—1967 புதன்கிழமை மாலை 3 மணிக்கு ஆராய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 13—7—1967 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்று இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது இரண்டுக்கு, மேற்படுமாயின் 15—7—1967 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை, கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் XX—தொழில்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,06,60,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss about the failure of the Government in starting adequate industries in Madurai and Ramanathapuram districts, I move the following cut motion :—

'That the allotment of Rs. 2,06,60,700 under Demand No. XX —Industries be reduced by Rs. 100.'

THIRU K. M. RAMASWAMY GOUNDER : Sir, to discuss about the decentralisation of industries in the State and to encourage more and more medium and cottage industries, I move the following cut motion :—

'That the allotment of Rs. 2,06,60,700 under Demand No. XX—Industries be reduced by Rs. 100.'

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நெசவாளர்களும் பருத்தி உற்பத்தியாளர்களும் அதிகமாக உள்ள கோவில்பட்டி வட்டாரத்தில், எட்டயபுரத்தில் பாரதி பேரால் ஒரு கூட்டுறவு ஆலை நிறுவ வேண்டிக்கொள்ள—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,06,60,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU V. K. KOTHANDARAMAN : Sir, to discuss and urge upon the Government the necessity for setting up a factory for producing meters, starters and switches for agricultural purposes, I move the following cut motion :—

'That the allotment of Rs. 2,06,60,700 under Demand No. XX—Industries be reduced by Rs. **100.**'

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: அடுத்து 40-ம் எண்ணுள்ள கோரிக்கைத் தீர்மானத்தை கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

கோரிக்கை எண் XL- தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கவர்னர் அவர்கள் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன் :—

"கோரிக்கை எண் **XL**—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,38,08,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும் ".

THIRU V. K. KOTHANDARAMAN : Sir, to discuss policy, I move the following cut motion :—

' That the allotment of Rs. 9,38,08,700 under Demand No. XL—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100.'

***திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு துணை அவைத் தலைவர் அவர்களே, எனது கட்சியின் சார்பில் இந்த மானியத்தின்மீது கொண்டு வரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கழிந்த 15 ஆண்டு காலமாக நமது மாநிலத்தை தொழிற் துறையில் ஒரு சிறந்த அபிவிருத்தி அடையக் கூடிய அளவில் நமது முன்னாள் அரசின் தொழிற்துறை அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றினார்கள் என்பது அகில பாரதமும் ஒத்துக்கொண்ட விஷயம். வெளிநாடுகளிலிருந்து பாரதத்தைப் பார்க்க வருகின்ற வர்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்தைப் பாராட்டியிருக் கிறார்கள். அயல் நாட்டுத் தூதர்கள்கூடப் பாராட்டியிருக் கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் தொழிற்துறை அபிவிருத்தி அடைவதற்குள்ள பல வழிவகைகள் இல்லாமல் இருந்த போதிலும் கூட, அன்னாருடைய சிறந்த சேவையினால் நம்முடைய மாநிலம் தொழிற்துறையில் முக்கியம் வாய்ந்த மாநிலமாக விளங்குகிறது. வேளாண்மையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நமது நாட்டு மக்கள் இன்று பொறி இயல், ரசாயன தொழில்களில்கூட ஈடுபடுவதற் கான வழிவகைகளுக்கு முன்னாள் அரசு வழி வகுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல. இன்று தனியார் வெளிநாடுகளிலிருந்து நம்முடைய நாட்டிலுள்ள தொழிற் துறையில் இன்வெஸ்ட்